BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்திற்காக கனடா இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் பேங்க்-லிருந்து $400 மில்லியன் தொகை பெறுவதற்கான  உறுதியளிப்பினை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பெற்றுவிட்டது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 21, 2021) – இன்றைய தினம்,  ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பிற்கு 2027 ஆம் ஆண்டிற்குள்ளாக, உமிழ்வுகள் அறவே இல்லாத 450 (ZEBs) பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கு ஆதரவாக  கனடா இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் பேங்க் (CIB )-யிலிருந்து $400 மில்லியன் தொகை பெறுவதற்கான  உறுதியளிப்பினை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பெற்றது; இதன்படி CIB ஆனது தங்களின் சம்மதத்தை கொள்கை அளவில் அறிவிப்பு செய்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி, CIB இன் நிதியளிப்பானது, ZEB களின் வரவிருக்கும் உயர்த்திய மூலதன செலவு மற்றும் சாலைகளில் மின்னூட்டம் ஏற்றிக்கொள்ளும் (சார்ஜிங்) உள்கட்டமைப்புக்கு பங்களிக்கும். இதுவே நகராட்சியுடனான CIB இன் மூன்றாவது ZEB நிதியளிப்புக்கான உறுதியளித்தலாகும், மேலும் கனடாவில் மின்சார போக்குவரத்து வாகனங்களை முழுமையாக மின்சாரமயமாக்குவதற்கான இன்றுவரையிலான மிகப்பெரிய மாற்றங்களில் ஒன்றை இது ஆதரிக்கிறது.

அனைத்துமே மின்சாரமயமாக்கப்பட்ட பேருந்துகள் கொண்ட தொகுப்பாக மாறுவது என்பது,  கார்பன் தடம் பதிவதைக் குறைப்பதற்கும் பசுமை நகரத்தை உருவாக்குவதற்குமான நகரத்தின் கடப்பாடுகளை உருவாக்குகிறது. ZEB க்கள் நிலைத்துநிற்கவல்ல போக்குவரத்து வாகனங்கள் ஆகும், மற்றும் அவை எங்கள் சமூகத்திற்கு திறன் மிக்க, இரைச்சலற்ற அமைதியான மற்றும் தூய்மையான பயணத்தை வழங்கும்.

2050 ஆம் ஆண்டுவாக்கில் ப்ராம்ப்ட்டனில் உருவாக்கப்படும் GHGக்கள் 80 அளவிற்கு சதவிகிதம் குறைப்பதற்கான நகரத்தின் பயணத்தில், போக்குவரத்து வாகனங்களின் மின்மயமாக்கல் என்பது ஒரு முக்கியமான மைல்கல்லாகும். தற்போது, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து தொகுப்பில் எட்டு பேட்டரி மின்சார பேருந்துகள் மற்றும் நான்கு மேல்நிலை சார்ஜர்கள் உள்ளன; இவற்றால் ஆண்டுக்கு ஒரு பேருந்தில் சுமார் 235 டன் $CO_2$ வெளிவிடுவது தடுக்கப்படுகிறது; இவை Züm பேருந்துகளின் 133 கலப்பின-மின்சார பேருந்துகளின் தொகுப்பில் அடங்குகின்றன.

ஒப்பந்தத்தின் இறுதி நிலையானது, ப்ராம்ப்ட்டன் நகர சபை மற்றும் பிராந்திய கவுன்சில் ஒப்புதலுக்கு உட்பட்டது. சிஜபி (CIB) மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஆகியவை 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிதி வழங்கல் நிலையை அடைந்துவிடுவார்கள் என எதிர்பார்க்கிறது.

**லின்குகள்**

- ப்ராம்ப்ட்டன் நகருக்கான முற்றிலும் உமிழ்வு இல்லாத 450 பேருந்துகள் எனும் நிலையை அடைய கனடா இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் பேங்க் $400 மில்லியன் தொகை வழங்க உறுதி தந்திருக்கிறது (Canada Infrastructure Bank commits up to $400 million towards the City of Brampton's 450 zero-emission bus transition)

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் பேருந்து தொகுப்பிற்கான சிஜபி (CIB) யின் பல மில்லியன் டாலர் நிதிக்கான உறுதியளிப்பை வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறேன். அடுத்த ஆறு ஆண்டுகளில் ப்ராம்ப்ட்டனின் சாலைகளில் அறவே உமிழ்வு இல்லாத 450 பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கான எங்கள் குறிக்கோளுடன் கனடாவில் போக்குவரத்தில் புரட்சியை ஏற்படுத்தி வருகிறோம். ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரம் ஆகும்; ஒன்றாக இணைந்து, எங்கள் கார்பன் தடம் பதிவதைக் குறைத்து இன்னும் நவீன மற்றும் நிலைத்துநிற்கவல்ல நகரமாக ஆக்க எங்களால் முடியும். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"இது ஒரு குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பு ஆகும். ப்ராம்ப்ட்டன் தூய்மையான போக்குவரத்து முயற்சிக்கான முனைப்புகளை மேற்கொள்வதில் முன்னணியில் இருக்கிறது; மேலும் போக்குவரத்துக்கான இந்த உறுதியேற்பானது, எங்கள் குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும். பசுமை நகரத்தை உருவாக்குவதற்கான எங்கள் கவுன்சிலின் உறுதியேற்பில் எங்கள் போக்குவரத்து நெட்வொர்க்கின் மின்மயமாக்கல் ஒரு முன்னுரிமை கொண்ட விஷயமாகும். ”

- *பால் விசென்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், பொதுப்பணி மற்றும் பொறியியல், பிராம்ப்டன் நகரம்*

“நன்கு இணைக்கப்பட்ட, நிலைத்து நிற்கவல்ல, மற்றும் ஆற்றல் திறன் கொண்ட பேருந்து போக்குவரத்து அமைப்பு மற்றும் அனைவருக்கும் பசுமையான நகரம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான நகரத்தின் அர்ப்பணிப்பை CIB இன் உறுதியேற்பு ஆதரிக்கிறது. ப்ராம்ப்ட்டனுக்கு முதலீட்டைக்

கொண்டுவருவதற்காக நகரின் வளர்ச்சியில் எங்கள் பங்குதாரர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம். ”

- *டேவிட் பாரிக், தலைமை நிர்வாக அதிகாரி, பிராம்ப்டன் நகரம்*

"நீண்ட கால வளர்ச்சி மற்றும் ஆரோக்கியமான மற்றும் ரசித்து வாழக்கூடிய சமூகங்களுக்கான பீல் பிராந்திய அமைப்பின் நோக்கங்களை அடைவதற்கு, நிலைத்துநிற்கவல்ல பயண முறைகள் கிடைப்பது மிக முக்கியமான விஷயமாகும். 2027 ஆம் ஆண்டிற்குள் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பில் அறவே உமிழ்வு இல்லாத 450 பேருந்துகள் கொள்முதல் செய்வதை ஆதரிப்பதற்காக கனடா உள்கட்டமைப்பு வங்கியிடமிருந்து 400 மில்லியன் தொகையிலான இந்த உறுதியளிப்பானது, சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் பொருளாதாரம் நிலைத்து நிற்கவல்ல தன்மைக்கு முன்னுரிமை அளிக்கும் வகையிலான வளர்ச்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முன்முயற்சியின் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். ”

- *நாண்டோ ஐயென்னிக்கா, பிராந்திய தலைவர்*

“ப்ராம்ப்ட்டன் நகரின் ZEB முயற்சிக்காக CIB பெரும் முதலீடு செய்வதில் நான் பரவசமடைகிறேன். எங்கள் கூட்டாண்மையானது, ப்ராம்ப்ட்டன் நகரை ஒரு பசுமையான நகரமாக மாற்றவும், வரவிருக்கும் பல தலைமுறைகளுக்கு தூய்மையான பொது போக்குவரத்தை வழங்கவும் இது உதவும். நகராட்சி உள்கட்டமைப்பை நவீனமயமாக்குவதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த இது ஒரு மகத்தான வாய்ப்பாகும். கனடா நாட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், நன்கு நிலைத்து நிற்கவல்ல சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்குமான முதலீடுகளை,  சிஐபி (CIB ) தொடர்ந்து செய்துவரும். ”

- *எஹ்ரென் காரி, தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி, கனடா இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் பேங்க்*

“தூய்மையான காற்று, இரைச்சல் இல்லாத அமைதியான சாலைகள் மற்றும் எங்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பான ஒரு கிரகம் - அதுதான் குறிக்கோள். ப்ராம்ப்ட்டன் நகரத்துடன் கூட்டு சேருவதன் மூலம், நாடு முழுவதும் அறவே உமிழ்வுகளற்ற 5,000 பேருந்துகள் என்னும் எங்கள் உறுதிப்பாட்டின் ஒரு அங்கமாக, அறவே உமிழ்வுகளற்ற 450 புதிய பேருந்துகளை ப்ராம்ப்ட்டன் நகர சாலைகளுக்கு கொண்டு வர கனடா உள்கட்டமைப்பு வங்கி உதவும். நல்ல வேலைகளை உருவாக்குவதன் மூலமும், பொருளாதாரத்தை உந்துதல் செய்வதன் மூலமும், காலநிலை மாற்றத்தை சமாளிப்பதன் மூலமும், மேலும் அனைவரையும் உள்சேர்க்கின்ற வகையிலான சமூகங்களை உருவாக்குவதன் மூலமும், கனடா நாட்டின் அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான,  கனடா அரசாங்க திட்டத்தின் ஒரு பகுதியாகும் இது. ”

- *மாண்புமிகு கேத்தரின் மெக்கென்னா, உள்கட்டமைப்பு மற்றும் சமூகங்கள் துறை அமைச்சர்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca

ஜூலீ டெஜார்டின்ஸ்
கனடா இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் பேங்க்
514-963-3478 | jdesjardins@cib-bic.ca